

முதலமைச்சர் அவர்களின் நல் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, அம்பத்தூர் மண்டலம், அண்ணா நகர் மேற்கு விரிவாக்கம் மில்லினியம் பூங்காவில் மேயர் அறிவிப்பின்படி, மூலதன நிதியின் கீழ் ரூபாய் 25 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மகளிர் உடற்பயிற்சிக் கூடத்தினை நேற்று (11.10.2025) திறந்து வைத்தார். இந்நிகழ்வில், மேயர் திருமதி ஆர்.பிரியா, அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, அம்பத்தூர் மண்டலக்குழுத் தலைவர் பி.கே.மூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் திருமதி ஜி.வி.நாகவள்ளி பிரபாகரன், திருமதி சா. உமா, மண்டல அலுவலர் ஆர்.ஏ. பிரபாகர் மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி புனித தோமையார் மலை ஒன்றியம் பொழிச்சலூர் ஊராட்சியில் முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புகிணங்க கிராம சபை கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ. பொதுமக்களிடம் குறைகளைக் கேட்டறிந்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார் அப்பொழுது ஊராட்சி தலைவர் பா.வனஜா தயாளன், மன்ற உறுப்பினர்கள் ஊராட்சி செயலர் ஊர் பொதுமக்கள் ஆகியோர் திரண்டு இருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 234 வது நாள்!

## எழும்பூர் தெற்கு பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, அக்.12-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 234 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (11.10.2025), எழும்பூர் தெற்கு பகுதி: 1) வட்டம் 58, நேவல் மருத்துவமனை சாலை, பெரியமேடு. 2) வட்டம் 58அ, லியோ பேக்கரி அருகில், ஏ.பி.ரோடு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.





இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், வி.சுதாகர், சொ. வேலு, கோ.ஏகப்பன், கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, புனிதவதிஎத்திராசன், கே.எஸ்.எம்.நாதன், கோ.மணி, ஜி.தாமோதரன், பி.எம். யாழினி, ராஜேஸ்வரிஸ்ரீதர், பரிதிஇளம்சுருதி,

எழும்பூர் தெற்கு/வடக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.விஜய குமார், ஆர்.பாபு, டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன், தி. தயாளன், வி.அபாய், சு.மனோகர், ந.பாலு, ஆர்.எம்.ரங்கநாதன், சி.சேகர், ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக் குமார், எல்.சம்பத் குமார், க.பா.பிரதீப் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்

# 1.50 இலட்சம் பனை விதைகள் நடும் பணி!

## மேயர் திருமதி ஆர்.பிரியா பாலவாக்கம் கடற்கரையில் தொடங்கி வைத்தார்!

சென்னை, அக்.12-

நேற்று (10.10.2025) மேயர் திருமதி ஆர்.பிரியா, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 1 முதல் 15 வரையிலான அனைத்து மண்டலங்களிலும் 1.50 இலட்சம் பனை விதைகள் நடும் பணியினைத் தொடங்கி வைக்கும் விதமாக, பெருங்குடி மண்டலம், பாலவாக்கம் கடற்கரையில் பனை விதையினை நட்டு தொடங்கி வைத்தார்.

மேலும், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் “நம்ம தங்கா” விழிப்புணர்வு சின்னத்தினை அறிமுகப்படுத்தினார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பசுமைப் பரப்பினை அதிகரிக்கும் வகையில், கடந்த நான்கரை ஆண்டுகளில் மொத்தம் 4,26,429 எண்ணிக்கையிலான பாரம்பரிய நாட்டு வகை மரங்கள் நட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் புதிய மரக்கன்றுகள் நடும் பணியும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் பனை மரங்களை தமிழ்நாட்டில் அதிகளவில் நடுவதற்கு உத்தரவிட்டு, அதன்படி தமிழ்நாடு முழுவதும் பனை விதைகள் நடும் பணி பெரும் இயக்கமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, கடல் அரிப்பினைத் தடுத்து, கடல் சீற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை குறைத்திடும் வகையில், மக்களுக்கு நலன் தரும் மரமாக, தமிழ்நாட்டின் மரமான பனைமரத்தின், விதைகளை பெருநகர சென்னை மாநகராட்சி கடற்கரைப் பகுதிகள் மற்றும் குளக்கரைப் பகுதிகள் உள்ளிட்ட பகுதிகளில் மாபெரும் பனை மர விதைகளை விதைக்கும் பணி நடைபெற்றது.

இதில் சென்னை கடற்கரைப் பகுதிகளில் உள்ள 45 இடங்களில் சுமார் 85,000 பனை விதைகளும், 41 நீர்நிலைப் பகுதிகளில் 65,000 பனை விதைகளும் நடப்படுகிறது.

நடவு செய்யப்படும் பனை விதைகள் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் “Udavi APP”ல் Geotagging செய்ய திட்டமிடப்பட்டு ள்ளது. இதன் மூலம் நடவு செய்யும் இடங்களை களஆய்வு செய்து முளைத்த பனை கன்றுகளை பராமரிக்க இயலும்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதியில் பனை விதைகள் நடும் பணிக்காக, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து குறிப்பாக பனை மரங்கள் அதிகம் காணப்படும் இராமநாதபுரம் மற்றும் தருமபுரி போன்ற மாவட்டங்களில் இருந்து பனைமர விதைகள் கொண்டு வரப்பட்டுள்ளது. இப்பணியானது, பெருநகர சென்னை மாநகராட்சியுடன் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள், சென்னைப் பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகம், தமிழ்நாடு தன்னார்வலர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ், மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், தெற்கு வட்டார துணை ஆணையர் அஃதாப் ரசூல், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர்கள் எஸ்.வி. ரவிச்சந்திரன் (பெருங்குடி), வி.இ.மதியழகன் (சோழிங்கநல்லூர்), நிலைக்குழுத் தலைவர் (கல்வி) பாலவாக்கம் த.விஸ்வநாதன், மாமன்ற உறுப்பினர் டாக்டர் தமிழரசி சோமு மற்றும் அலுவலர்கள், தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.


